**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.35/2020**
**Prosecution Witnesses : 8**

| | | | |
|---|---|---|---|
| Name | : பாண்டி | Caste | : |
| Father 's Name / Husband Name | : லட்சுமணன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(17.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது பணி ஓய்வுபெற்று எனது சொந்த கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு கள்ளிக்குடி காவல் நிலையத்தில் 01.03.2018 அன்று சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது பேய்க்குளம் பெருமாள் மகன் ராமகிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்த மூலமாக புகாரை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப கள்ளிக்குடி காவல் நிலைய குற்ற எண். 37/2018, ச/பி. 379 இதச வாக வழக்கு பதிவு செய்தேன். **அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆகும்**. அதை புகாருடன் முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் பின்பு மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கு விசாரணைக்காக ஒரு நகலை எடுத்து காலை 10 மணிக்கு பேய்க்குளம் சம்பவயிடம் சென்று பார்த்தேன். சாட்சிகள் கந்தன், கருப்பையா ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.9, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.10 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது**. அதன் சம்பவயிட சாட்சிகளான ராமகிருஷ்ணன், காப்புலட்சுமி, முப்பிடாதி, கந்தன், கருப்பையா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எனது விசாரணையை முடித்து சார்பு ஆய்வாளர் திரு.கமலமுத்து அவர்களிடம் ஒப்படைத்தேன். அவர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் கு.வி.**

இந்த வழக்கில் குற்ற எண்ணும், இதற்கு அடுத்த குற்ற எண்ணான 38/2018ம் ஆடு திருடுவது சம்பந்தமான வழக்கு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த இரண்டு வழக்குகளிலும் உள்ள புகார்தாரர்கள் ஒரே சமயத்தில் காவல் நிலையத்தில் ஆஜரானர்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இரண்டு குற்ற வழக்குகளிலும் புகாரானது போலிசாரால் சொல்லபட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இரண்டு வழக்கும் ஆடுதிருடிய வழக்கு என்றும் அதில் விசாரணை செய்தால் வழக்கு தோற்றுவிடும் என்றும் அதனால் தான் இரண்டு வழக்குக்கும் தனிதனியாக வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கு போகவில்லை என்று சொன்னால் சரியல்ல. நானாகவே சம்பவயிடத்தை வரைந்துகொண்டு சம்பவ சாட்சிகளின் கையெழுத்தை பெற்றுக் கொண்டேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை